EF-166-2024

# காளான் வளர தயாராக உள்ள பை (RTF BAG) தயாரிப்பு தொழில்நுட்பம்




காளான் ஆராய்ச்சி கூடம்
பயிர் பாதுகாப்பு பிரிவு
ICAR-இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம்

## அறிமுகம்

- காளான்கள் ஊட்டச்சத்து மற்றும் மருத்துவ கூறுகள் அடங்கியத சிறந்த காய்கறி களஞ்சியம். அதை தினசரி உட்கொள்ளல் மூலம் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்தலாம்.
- அதன் ஊட்டச்சத்து மற்றும் மருத்துவ பண்புகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் பொதுவாக கடைகளில் கிடைக்காததால் மற்றும் அதிக விலை ஆகிய காரணங்களால் , காளான்கள் தினசரி உட்கொள்ளப்படுவதில்லை.
- மற்ற காளான் வகைகளை ஒப்பிடுகையில் சிப்பி காளான்களை வளர்க்க எளிதானது என்றாலும் காளான்கள் சிறிய அளவில் வீட்டு உபயோகத்திற்காக வளர்க்க முயலும் போது செயல்முறை சிறிது கஷ்டமாகிறது.
- காளானை தினசரி உட்கொண்டு வீட்டில் உள்ளவர்கள் ஊட்டச்சத்தை அதிகரிக்க ICAR-IIHR காளான் வளர தயாராக உள்ள பை (RTF BAG) தயாரிப்பு என்ற செய்முறையை தொடங்கியுள்ளது
- வீட்டிலேயே அல்லது கொல்லைப்புறத்தின் சில ஈரமான மூலையில் சிப்பி காளானை எளிதாக வளர்க்க இது உதவுகிறது.

**RTF பைகளில் இருந்து காளான் உற்பத்தியில் பின்வரும் படிகள் அடங்கும்**

காளான் விதை போட்ட மற்றும் வளர்ந்த நிலையில் உள்ள வைக்கோலை நிரப்பிய பைகளை நுகர்வோருக்கு வழங்குவது



அந்த பையில் ஒரு 4-5 பிளவுகள் அல்லது துளைகள் நுகர்வோர் செய்ய வேண்டும், தண்ணீர் தெளிக்க வேண்டும். 5-7 நாட்களுக்குள் காளான்கள் முளைக்கும். பைகளை ஒரு நன்கு ஒளி வரும் பகுதியில் வைக்கவும், ஆனால் நேரடி சூரிய ஒளியில் இல்லை. வழக்கமான வாசிப்புக்கு தேவையான வெளிச்சம் போன்று இருந்தால் போதுமானது.



சிப்பி காளான் வளர்பிற்கு 24 - 27°C மற்றும் RH ஈரபதம் 80-85% தட்பவெப்பநிலை சிறந்தது. மேலேயும் கீழேயும் மாறும் வெப்பநிலை விளைச்சலைக் குறைக்கலாம், வடிவம் மாறலாம், நிறம் மற்றும் காளான்களின் தோன்றும் நேரம் அதிகரிக்கும். காளான்கள் துளைகள் அல்லது நீண்ட ஒட்டையில் இருந்து மட்டுமே தோன்றும்.



தினசரி 2-3 நீர் நுண்தெளிப்பு தேவைப்படுகிறது. காளான்கள் மீது. அதிகமாக தண்ணீர் விடக்கூடாது கூடுதல் தண்ணீரால் காளான்களின் தரம் வெகுவாகக் குறைகிறது சாதாரண காளான் வளர்ச்சிக்கு காற்று சுழற்சி அவசியம்.



புதிய காற்று பற்றாக்குறை காளான்களை வளரவிடாமல் தடுக்கும் மற்றும் நீண்ட சரமான காளான்களை உற்பத்தி செய்யும். மெதுவாக காளான் தண்டை திருப்புவதன் மூலம் அறுவடை செய்து வளரும் ஊடகத்திலிருந்து அவைகளை விடுவிக்கவும்.



## சிப்பி காளான் வளர்க்க விலை சகாயமான குடில்கள்

### 1. சூரிய மின்சார சக்தியுடனும் இயங்கும் காளான் வளர்க்கும் குடில்

இந்த குடில் ICAR-IIHR நிறு வனத்தால் 2018-19 ஆண்டில் வடிவமைக்கப்பட்டத. இந்த குடிலை உபயோகப்படுத்தி கிராமம் மற்றும் நகரப்புற இடங்களில் காளானை வளர்க்க முடியும். காளான் வளர்க்க பயன்படும் கட்டிடங்களால் ஆன பண்ணையை விட இது விலை குறைந்த அமைப்பாகும்.




| | | |
|---|---|---|
| அளவு | : | 1.40 x 1.00 x 1.7 மீட்டர் |
| கொள்திறன் | : | 80 பைகள் (1 கிலோ) |
| மகசூல் திறன் | : | 20 - 30 கிலோ ஒரு மாதத்தில் |
| கட்டுமானப் பொருட்கள் | : | இரும்பு குழாய், 40 மெஷ் நைலான் வலை, சணல்துணிகள், சிபிவிசி குழாய்கள், சிறிய நீர் தொட்டி, 30 வாட் டிசி பம்ப், நுண்துளை தெளிப்பான்கள், சூரிய மின்சார தகடுகள், மின் மாற்றி, பேட்டரி, மற்றும் நேர கட்டுப்பாட்டு கருவி. |

### 2. விலை சகாயமான நடுத்தர நிரந்தரமான காளான் வளர்க்கும் குடில்கள்

இந்த குடில் ICAR-IIHR நிறுவனத்தால் 2018-19 ஆண்டில் வடிவமைக்கப்பட்டது. இந்த குடில்கள் மூலம் முழு கொள்ளளவையும் உபயோகப்படுத்தி வளர்க்க முடியும். காளான் வளர்க்க பயன்படும் கட்டிடங்களால் ஆன பண்ணையை விட இது விலை குறைந்த அமைப்பாகும் .





| | | |
|---|---|---|
| அளவு | : | 3.0 x 3.0 x 3.5 மீட்டர் |
| கொள்திறன் | : | 350 பைகள் (1 கிலோ) /300 பைகள் (2 கிலோ) |
| மகசூல் திறன் | : | 70 - 85 கிலோ ஒரு மாதத்தில் |
| கட்டுமானப் பொருட்கள் | : | இரும்பு குழாய், 40 மெஸ் நைலான் வலை, சணல்துணிகள் |
| பயன்கள் | : | நல்ல தரமான ஆரோக்கியமான காளான் கிடைத்தல் மற்றும் குறைந்த வளர்ப்பு செலவு |

## ICAR-IIHR வடிவமைத்த சூரிய சக்தி மற்றும் பல தர எரிபொருளால் இயங்கும் நீராவி உருவாக்கும் பாய்லர் இணைக்கபட்ட ஆட்டோ கிலேவ்


முன்பகுதி


பின்பகுதி


தொற்று நீக்கும் இயந்திரம்

| | | |
|---|---|---|
| செயல் திறன் | : | 250 - 300 வைக்கோல் பைகள் (1 கிலோ) ஒரு நாளைக்கு முழு தொற்று நீக்கம் செய்யப்படும் |
| எரிசக்தி | : | மின்சாரம் / எல்பிஜி வாயு / மர எரிபொருள் சிப்பி காளான் வளர்ப்பில் மூலக்கூறை முழு தொற்று நீக்கம் செய்ய பயன்படுகிறது |

## ICAR-IIHR வடிவமைத்த காளான் மற்றும் காளான் வளர் பைகளை விற்க பயன்படும் வண்டி








- ❖ காளான் வளர்ப்பைகளில் வளர்ந்த காளானோடு இந்த வண்டியில் ஏற்றி வாடிக்கையாளர்களிடம் நேரடியாக கொண்டு சென்று விற்பனை செய்ய பயன்படுகிறது
- ❖ நைலான் வலை சுற்றிலும் பொருத்தப்பட்டுள்ளதால் பூச்சிகள் உள்ளே வராமல் தடுக்கும், காற்றோட்டத்திற்கும் உதவுகிறது.
- ❖ மேலும் தாராளமாக கிடைக்கும் கோணி துணிகளை சுற்றிலும் தொங்கவிட்டு அதை எப்போதும் நீர் ஊற்றி ஈரமாக வைத்திருப்பதன் மூலம் வண்டியின் உள்ளே ஈரப்பதத்தை தக்க வைக்க முடியும்.
- ❖ இந்த வண்டியில் 36 பைகளை (1 அல்லது 2 கிலோ) கொண்டு செல்ல முடியும்.

## ICAR-IIHR ஹெசரகட்டா, பெங்களூரில் (RTF) பை உற்பத்திக்கு சுயபயிற்சி எடுக்கும் மையம்

- ICAR - இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம் நாட்டில் ஒரு முதன்மையான தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம். இந்த (RTF) பை உற்பத்திக்கு நேரடியாக சுயபயிற்சி எடுக்கும் மையததை நிறுவியுள்ளது.
- காளான் ஸ்பான் (விதை) உற்பத்திக்கு, காளான் வளர்ப்பு, சிப்பி, பால், கிங் சிப்பி, ஷிடேக்கே மற்றும் பிற குறைவாக அறியப்பட்ட இனங்கள், உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டல், காளான் இயந்திரமயமாக்கல் மற்றும் பயிற்சி தேவைக்கு நவீனமான ஆரம்பம் முதல் இறுதி வரை உள்கட்டமைப்பு மற்றும் அறிவியல் நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டிற்கும் காளான்களை கொண்டு வருவதற்கான முயற்சியாக ICAR-IIHR-ல் உருவாக்கப்பட்டது. வளர்க்கும் இடம், திறமை மற்றும் வளர் கட்டுப்பாடுகள் உள்ளவர்கள் காளான்களை சொந்தமாக வளர்த்து மகிழ்ச்சி அடையலாம்.
- இந்த மையம் வைக்கோல் சேமிப்பகம் ,வைக்கோல் வெட்டுதல், வைக்கோல் ஊறவைத்தல், கலவை மற்றும் பை நிரப்புதல் கொட்டகை, தொற்று நீக்கும் அறை, காளான் விதை போடும் அறை மற்றும் காளான் திசு வளர்ச்சி மற்றும் வளர்ச்சி அறை ஆகியவைகளை கொண்டுள்ளது.
- வைக்கோல் வெட்டும் கருவி , ICAR-IIHR வடிவமைத்த சூரிய சக்தி மற்றும் பல தர எரிபொருளால் இயங்கும் நீராவி உருவாக்கும் பாய்லர் இணைக்கபட்ட ஆட்டோ கிலேவ் .ஆகிய இயந்திரங்கள் உள்ளன.
- ICAR-IIHR இல் உள்ள இந்த மையத்தில் தயாரிக்கப்படும் RTF பைகள் நகர்ப்புற மற்றும் கிராமப்புற வீடுகளில் காளான் வளர்க்க விற்கலாம். அல்லது உற்பத்தி செய்யும் வசதி இருந்தால் அங்கு கொண்டு சென்று விளைவித்த காளான்களை அறுவடை செய்து விற்கலாம். ஏதேனும் தகவல், இணைப்புகள் மற்றும் தொடர்புகள் இருந்தால் சந்தை இணைப்புகளுக்கு இந்த மையம் உதவும் வகை செய்யப்படும்.



காளான் சுயபயிற்சி மையம்




தொற்று நீக்கும் அறை



காளான் விதை சேர்க்கும் அறை



காளான் திசு வளர்க்கும் அறை

## சுயபயிற்சி மையத்தில் உள்ள வசதிகள்

| வரிசை எண் | வசதி | பயன்கள் | அதிக பட்ச திறன் |
|---|---|---|---|
| 1 | வைக்கோல் வெட்டும் கருவி | வைக்கோலை துண்டு துண்டாக வெட்டுவதற்கு | 500 கிலோ ஒரு நாளைக்கு |
| 2 | கிருமி தொற்று நீக்கும் கருவி (ஆட்டோ கிளேவ்) | ஒரு முறைக்கு 30-35 ஒரு கிலோ பைகளை கிருமி தொற்று நீக்கம் செய்ய | 8 மணி நேர அலுவலக நேரதில் 3 முறை உபயோக படுத்துவதன் மூலம் ஒரு நாளைக்கு 100 ஒரு கிலோ பைகள் |
| 3 | காளான் திசு வளர்க்கும் அறை | கிருமி தொற்று நீக்கம் செய்து காளான் விதைகள் போடப்பட்ட பைகளை வைக்க | ஒரு கிலோ 500 பைகளை அதிக பட்சமாக தொங்க விட முடியும் |
| 4 | காளான் வளர்க்கும் அறை | காளான் திசு வளர்ந்த பைகளை வைக்க | இந்த வசதி இல்லை பயிற்சியாளர்கள் அந்த பைகளை அவர்களின் இடதிற்கு கொண்டு சென்று வளர்க்க வேண்டும் |


**நேரடியாக சுயபயிற்சி எடுக்க அணுகவும்**

**Horticultural Technology Management- Business Planning & Development Unit,**
**ICAR-Indian Institute of Horticultural Research, Hessaraghatta Lake P.O.**
**Bengaluru – 560089 , Email : itmu.iihr@icar.gov.in**
**Contact No.: 080 – 23086100 , Extn.: 431**

ICAR-IIHR காளான் விதை உற்பத்தி சாதனங்களின் தொழில்நுட்ப விவரங்கள் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Institute Technology Management Unit
ICAR-Indian Institute of Horticultural Research, Hessaraghatta Lake P.O.
Bengaluru – 560089 , Email : itmu.iihr@icar.gov.in
Contact No.: 080 – 23086100 , Extn.: 431

காளான் வித்துக்களை வாங்க புக்கிங் செய்யவும் மற்றும் உறுதிப்படுத்தவும் தேவையான தொலைபேசி எண்கள்

Mobile No: 7090949605, Tel. No. 080 – 23086100 , Extn.: 347, 348, 349
Email : mushroomiihr@gmail.com
Website : www.iihr.res.in/mushroom



**Compiled and Edited By : Dr. Chandrashekara C.**
**Contributors : Dr. G. Senthil Kumaran, Dr. Meera Pandey & Dr. Chandrashekara C.**
**Tamil Translation : Dr. G. Senthil Kumaran**
**Printing Funded By : AICRP on Mushroom**

வெளியிடுவோர்: இயக்குனர்
ICAR - இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம்
ஹெஸரகட்டா அஞ்சல், பெங்களூர்- 560089
தொலைபேசி: 080-23086100
இமெயில்: director.iihr@icar.gov.in வெப்சைட்: www.iihr.res.in
June 2024


